TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.த.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110260

1. District : திருவண்ணாமலை PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் திருவண்ணாமலை Year: 2021 FIR No.: 02/2021 Date: 19.02.2021
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 16.02.2021 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 09.00 hrs Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 19.02.2021 Time : 07.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : எழுத்துமூலம்
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: தேசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தேசூர் பஜார் சுமார் 70 kms கிழக்கு.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திருமதி. ஸ்ரீதேவி (b) Father's/ Husband's Name : திரு. மாரிமுத்து
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 33/2021 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : விவசாயம் (g) Address : No. 215, பெரிய தெரு, சீயமங்கலம், தேசூர் வந்தவாசி தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
எதிரி. திரு. அண்ணாதுரை, செயலாளர், தேசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், திருவண்ணாமலை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet Attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

ஸ்ரீதேவி 19.2.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
19/2/2021.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.02.2021 at 10.45 hrs.

Name: பெயர் R. அருண் பிரசாத்
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திருவண்ணாமலை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**பணிந்து அனுப்பப்படுகிறது:-** திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் 19.02.2021-ஆம் தேதி காலை 07.30 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், சீயமங்கலம் கிராமத்தை சேர்ந்த திருமதி.ஸ்ரீதேவி என்பவர் புகார் மனு ஒன்றை அளித்தார். அதன் விவரம் பின்வருமாறு: 19.2.2021 விடுநர் ஸ்ரீதேவி, க/பெ மாரிமுத்து, 215, பெரிய தெரு, சீயமங்கலம், தேசூர், வந்தவாசி தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. ஐய்யா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். என் கணவர் பெயர் மாரிமுத்து அவர் வெள்ளிமேடுபேட்டை அருகில் உள்ள நீர்ப்பத்தகரம் கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறார். நான் சீயமங்கலம் கிராமத்தில் எனது தாயார், எனது மூன்று பிள்ளைகளுடன் வசித்து வருகிறேன். சீயமங்கலம் கிராமத்தில் எங்களுக்கு சொந்தமாக சுமார் 4 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலத்தில் விவசாயம் செய்து வருகிறோம். கடந்த 16.10.2020-ஆம் தேதி பயிர் கடன் கேட்டு தேசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மனு செய்தேன். என்னுடைய உருப்பினர் எண்.8693 மற்றும் வங்கி கணக்கு எண்.2079 ஆகும். பின்னர் தேசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பணிபுரியும் செயலாளர் திரு.அண்ணாதுரை என்பவர் எனக்கு ரூபாய் 50,000/- எழுத்தால் ரூபாய் ஐய்ம்பது ஆயிரம் மட்டும் தான் பயிர் கடன் தரமுடியும் என்று கூறினார். அதன்பேரில் இரண்டு நாட்கள் கழித்து ரூபாய் 10,000/- மதிப்புள்ள 12 மூட்டைகள் உரம் கொடுத்தார். மீதிப்பணம் ரூபாய் 40,000/-ஐ வங்கி அக்கௌன்டில் போட்டு விடுகிறேன் என்றும் கூறினார். இந்த கடன் தொகையை எடுப்பதற்கு தேசூரில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கியில் என்னுடைய பெயரில் அக்கௌன்ட் ஓப்பன் பண்ணால் தான் பணத்தை எடுக்க முடியும் என்று கூறியதால், அதற்கு திரு.அண்ணாதுரையிடம் ரூபாய் 600/- கொடுத்தேன். ஆனால் இதுவரை என் பெயரில் திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் கணக்கு ஓப்பன் பண்ணியதற்கான பாஸ் புக்கோ மற்றும் நான் கையொப்பமிட்ட உரம் வாங்கிய பில்லோ என்னிடம் கொடுக்கவில்லை. அதனால் என் வங்கி கணக்கில் கடன் தொகை போடப்பட்டுள்ளதா இல்லையா என்பது இதுவரை எனக்கு தெரியவில்லை. அதன்பிறகு நான் பலமுறை தேசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்கு சென்று செயலாளர் திரு.அண்ணாதுரையை நேரில் சந்தித்து கடன் தொகையை வழங்கும்படி கேட்டேன். அவர் என்னை கண்டுகொள்ளவில்லை, பதில் எதும் கூறவில்லை. தற்போது தமிழக அரசு பயிர் கடன் தள்ளுபடி அறிவித்த பிறகு கடந்த 11.02.2021-ஆம் தேதி நான் செயலாளர் திரு.அண்ணாதுரை அவர்களை நேரில் சந்தித்து கேட்டேன். அதற்கு அவர் பயிர் கடன் தொகை வழங்கவும் அதை தள்ளுபடி செய்ய ஏற்பாடு செய்வதற்கு இலஞ்சமாக பணம் தர வேண்டும் என்று கூறினார். நான் எதற்காக பணம் தர வேண்டும் என்று கேட்டேன்.

அதற்கு அவர் இதுசம்மந்தமாக பிறகு விவரமாக சொல்கிறேன் என்றார். அதன்படி கடந்த 16.02.2021-ஆம் தேதி திரு.அண்ணாதுரை அவர்களை தேசூர் பஜாரில் காலை சுமார் 09.00 மணியளவில் நான் நேரில் பார்த்து லோன் சம்மந்தமாக கேட்டேன், அப்போது அவர் பயிர் கடன் தொகை வழங்குவதற்காகவும், அதை தள்ளுபடி செய்வதற்காகவும் இலஞ்சமாக பணம் ரூபாய் 5,000/- தர வேண்டும் என கேட்டார். நான் என்னால் அவ்வளவு பணம் தர முடியாது என்று பதில் சொன்னேன். அதற்கு அவர் கேட்டவாறு இலஞ்சப்பணம் ரூபாய் 5,000/- தரவில்லை என்றால் மேற்படி லோன் சம்மந்தமாக எந்த ஏற்பாடும் செய்ய முடியாது என திட்ட வட்டமாக கூறினார். எனக்கு இலஞ்சமாக பணம் ரூபாய் 5,000/- கொடுக்க விருப்பமில்லாதால் பயிர் கடன் தொகை வழங்குவதற்காகவும், அதை தள்ளுபடி செய்வதற்காகவும் இலஞ்சமாக பணம் ரூபாய் 5,000/- கேட்ட தேசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர் திரு.அண்ணாதுரை என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் அளிக்க இன்று 19.02.2021-ஆம் தேதி காலை என் மாமா அண்ணாமலை என்பவருடன் புறப்பட்டு திருவண்ணாமலை வந்து கொண்டிருக்கும் போது என்னுடைய போனில் வந்து பணம் ரூபாய் 5,000/- புரட்ட முடியவில்லை என்றால், லோன் அமௌண்ட் கொடுக்கும் போது இலஞ்சமாக ரூபாய் 5,000/-ஐ கழித்துக்கொண்டு தருகிறேன் என்று கூறினார். எனவே லஞ்சம் கேட்ட அண்ணாதுரை மீது நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு SD/XXX ஸ்ரீதேவி 19.2.2021

Sir,

Received the complaint on 19.02.2021 at 07.30 hrs and a quick verification on the general reputation of the accused officer was made and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also checked and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 19.02.2021 at 08.30 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.02/2021, u/s. 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to Hon'ble CJM and Special Judge, TVM and sent the copies to the officers concerned. Sd/-xxxxxx இரா.அருள்பிரசாத், 19/02/2021 காவல் ஆய்வாளர், ஊ.த.க.பிரிவு, திருவண்ணாமலை.

19/02/2021.